
# ஆத்மஜோதி



சமயாசாரியர் நால்வர்



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

| ஜோதி 17 | விசுவாவசு ஹ ஆனி மீ 1உ [15-6-65] | சுடர் 8 |

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | நால்வர் பொற்றுள் எம் உயிர்த் துணையே | 225 |
| 2 | அடியார் நினைப்பு | 226 |
| 3 | நாலு பேர் சொன்னபடி நடவுங்கள் | 227 |
| 4 | அரன் புகழ் பாடுவோம் | 230 |
| 5 | திருக்கோவையார் | 232 |
| 6 | ஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி | 239 |
| 7 | தளவாய் நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் துதியமுது! | 241 |
| 8 | சிதானந்தஜியைப் பின்பற்றுங்கள் | 246 |
| 9 | இமயச் சுடரே வருகவே! | 247 |
| 10 | பூனையின் பல்லும் மனிதனின் மனமும் | 249 |
| 11 | ஆச்சிரம வாழ்வு ஆனந்த வாழ்வு | 252 |
| 12 | அத்தனின் அருள் (தொடர்ச்சி) | 255 |


~ ~ ~ ~ ~ ~ ~ ~

## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூபா 75.00 வருட சந்தா ரூபா 3.00

தனிப்பிரதி — சதம் 30

கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா

''ஆத்மஜோதி நிலையம்'' நாவலப்பிட்டி. [சிலோன்]

தொலைபேசி எண்:— 353

# நால்வர் பொற்றுள் எம் உயிர்த் துணையே

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்
பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவாரமுந் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றுளெம் உயிர்த்துணையே

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவைகாசிமூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்திலந்தம்
முத்தமிழ் வாதவூரர் முதியநல் ஆடிதன்னில்
சுத்தமாம் சோதிநாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்

அப்பருக் கெண்பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பரிய நாலெட்டில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினாறறி

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

இடையறுப் பேரன்பும் மழைவாருமிணைவிழியுமுழவாரத்திண்
படையறுத் திருக்கரமுஞ் சிவபெருமான் திருவடிக்கே பதித்த
நெஞ்சும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானம்
பாடல்
தொடையறுச் செவ்வர்யுஞ் சிவவேடப்பொலிவழகுந் துதித்து
வாழ்வாம்

# அடியார் நினைப்பு

**(சுத்தானந்தர்)**

மனத்தைமாசற்றபிள்ளைபோல்ஆக்கு; ஆர்வப்பசிகொள். 'அம்மையே அப்பா' என்று ஆருயிர்த் தந்தையைக் கூவு. அவன் தனது ஞானப்பாலை ஊட்டி உன்னை ஆட்கொண்டு ஞானசம்பந்தன் ஆக்குவான். நீ கைத்தாளம் போட்டுத் துதி: அவன் பொற்றாளம் அளிப்பான். நீ காலால் நடந்து திருத்தலம் புகு; உனக்கு முத்துப்பல்லக்கு அனுப்புவான். ஆனால் பல்லக்கு ஏற வேண்டும் என்ற ஆசையுடன் அவனை வேண்டாதே. இறைவனைத் தவிர வேறொன்றும் விரும்பாதே. அவனை அடை; அனைத்தும் தம்மால் எய்தும். அவன் அன்பர்க்கன்பன், அடியார்க் கெளியன், உள்ளங் கவர் கள்வன், உன் உள்ளத் தொளிந்த கள்வன். அவனைக் கண்டு பிடி.

சம்பந்தர் அப்பரே என்றார். வாகீசர் அடியேன் என்றார். எவ்வளவு தூய பணிவு, வணக்கம்! மதுரையில் சிவமுந் தமிழும் சீரோங்கப் பணி செய்து வெற்றி முழக்கத்துடன் அப்பரைக் காணப் பூந்துருத்திக்கருகே வந்தார் ஞானசம்பந்தர்; எங்குற்றார் அப்பர்? என்றார். ''இங்குற்றேன்! இதோ, உனதடிகளைத் தாங்கிவரும் பேறு பெற்றேன் என்று பல்லக்குச் சுமந்து கொண்டே சொன்னார் அப்பர். ஆ, தாங்கள் இவ்வாறு செய்யத் தகுமோ? என்றஞ்சி வணங்கி ஆர்வமுடன் அப்பரைத் தழுவிக் கொண்டார் சம்பந்தர். தகும், தகும் ஓம் சிவம் என்று வணங்கினார் அப்பர். அன்பும் வணக்கமும் அடியார்க்கழகு!

அகங்காரமே மனச் சூலை. அது வாழ்வைச் சித்திரவதை செய்யும். வஞ்ச அகந்தையை விரட்டி அடி. நெஞ்சத்தை இறைவனுக்கே இடமாக்கு. அவனையே நினை. நினைப்பவர் மனமே கோயில். மனச் சூலை நீங்கும். வாக்குத் தெளியும். இறையொளி துலங்கும். அச்சம் ஒழியும். அமுதம் பொழியும்.

——

# நாலு பேர் சொன்னபடி நடவுங்கள்

(ஆசிரியர்)

வாழ்க்கையில் கெட்டு நொந்த ஒருவனைப் பார்த்து ''நாலு பேர் சொன்னபடி நடந்தால்'' இவனுக்கு ஏன் இந்தக் கதி வரப் போகின்றது என்று கூறுவது மரபாகி விட்டது. இந்த நாலு பேரும் யார்? என்பது கேள்வி. நமது வாழ்க்கைக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டியவர்கள் சைவ சமயாசிரியப் பெருமக்கள் நால்வர். அவர்கள் எத்தனையோ சோதனைகளின் மத்தியிலே தமது வாழ்வின் பண்பாட்டை உருவாக்கிக் கொண்டவர்கள். அவர்கள் கட்டி எழுப்பிய வாழ்வுக் கோபுரத்தின் உச்சியிலே நாம் இன்று வாழ்கின்றோம். ஆதலால் நாம் பாக்கியசாலிகள். அவர்களுடைய சோதனைகள் ஒன்றும் நமக்கு இல்லை. அவர்கள் வாழ்ந்து காட்டிய அடியைப் பின்பற்றி நடக்கவும் முடியாத நிலையில் இருக்கின்றோம் என்பதை நினைக்கும் போதுதான் எமது வாழ்வு எவ்வளவு பின்னடைந்து இருக்கிறது என்பதை உணர முடிகிறது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் ஆகிய நால்வர் பெருமக்களும் சமயாசாரியர், சைவசமயகுரவர், நால்வர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். அவர்களின் பின்னால் வந்த மக்கள் அனைவருக்கும் அவர்களே குருமாராக விளங்குகின்றார்கள். ஆனபடியால் அப் பெயர்களைப் பெற்றனர். அவர்கள் இன்று பூத உடலோடு காணப்படாவிடினும் அவர்கள் அருளி வைத்துச் சென்ற திருமுறைகளின் உருவத்திலே கண்டு கொண்டிருக்கின்றோம். இறைவனைத்தவிர வேறு ஒன்றையும் பற்றிப் பேசவில்லை. இறைவனது சிருஷ்டியின் மூலம் இறைவனையே கண்டவர்கள். எல்லா உலகத்தையும் இறைவனாகக் கண்டவர்கள். விஞ்ஞானிகள் உலகத்தைப் பஞ்ச பூத சேர்க்கையாகக் காணுகின்றார்கள். மெய்ஞ்ஞானிகள் இவ்வுலகம் முழுவதும் இறைவனே பரந்திருக்கின்றான் என்பதைக் கண்டவர்கள்.

அவர்களுடைய நடைமுறை வாழ்க்கையே உபதேசங்களாகும். வாழ்க்கைக்கும் உபதேசத்திற்கும் ஒற்றுமை கண்டவர்கள். அவர்கள் வாழ்ந்து காட்டிப் போன வாழ்க்கையை மேற்கொண்டால் நாமும் பிறந்த பயனை

அடைவோம். அவர்கள் வாழ்க்கை எமக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. அவர்களது தோத்திரங்கள் எமக்கு உப தேசங்களாக அமைந்துள்ளன. அவர்களது திருமுறைப் பாடல்களை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற் றெழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதினால் இறைவன் திருவ ருள் தாமாகவே வந்து அமையும்.

ஞானசம்பந்தக் குழந்தை மூன்று வயதிலே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க அம்மையே அப்பா என்று அழுதது. தோணியப்பர் பெருமான் அம்மையோடும் எழுந்தருளிப் பொற் கிண்ணத்திலே திருமுலைப்பால் ஊட்டி அருளினார். அன்று தொடக்கம் திருஞானசம்பந்தக் குழந்தையாக மாறி விட்டது. அன்று தொடக்கம் ''அழுத பிள்ளை பால்குடிக் கும்'' என்ற பழமொழி தோன்றியது. அப் பழமொழியை நாம் சிந்திக்கும் போதெல்லாம், எடுத்து ஆளும் போதெல் லாம், சம்பந்தக் குழந்தைக்கு அம்மையப்பர் வந்து பால் ஊட்டிய காட்சி படமாகத் தெரிய வேண்டும். சம்பந்தக் குழந்தை எமக்கு அருளிச் சென்ற இறைவனாரது திருவுரு வத்தை மனதிலே தியானிக்க வேண்டும். தோடுடைய செவியனாக, விடை ஏறியாக, ஓர் தூவெண் மதிசூடியாக, காடுடைய சுடலைப்பொடி பூசியாக இறைவன் தமக்குக் காட்சி கொடுத்ததாகக் குழந்தை இறைவனாரது திருஉரு வத்தை எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

கடலில் ஆழ்பவனுக்குத் துரும்பும் துணையாக உதவும் என்று சொல்வார்கள். நாவுக்கரசுப் பெருமானைக் கல் லோடு கட்டி ஆழ்கடலில் போட்டார்கள்.

**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சிவாயவே**

என்று பாடினார். கல் தெப்பமாக மிதந்தது. பிறவி யாகிய கடலில் ஆழ்ந்து செல்லும் எம்மைக் கரையேற் றும் தெப்பம் நமச்சிவாயமாகும்.

**நமச்சிவாயமே நன்னெறி காட்டுமே**

சுந்தரமூர்த்திசுவாமிகள் இறைவரைத் தமது தோழனாகக் கொண்டவர். மண்வேண்டுமானாலும் பெண் வேண்டுமானாலும் பொன் வேண்டுமானாலும் இறைவரையே கேட்டுப் பெற்றவர். ஒருவன் தனது உண்மைத் தோழனிடம் தான் உள்ளத்தில் உள்ள எதையும் ஒளியாது கூறக்கூடும். சாதாரண மனிதரைத் தோழனாகப் பெற்றவர்கள் அவர்களிடம் கூட எதையாவது மறைக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்து விடுகிறது. இறைவனைத் தோழனாகப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அவன் ஒருவனிடமேதான் எமது உள்ளத்தை ஒளியாமல் திறந்துவிடக்கூடும். நாம் ஒளித்தாலும் அவன் புகுந்து அறிந்து விடுகின்றான். ஆகவேதான் சுந்தரர் இறைவனாரைத் தோழனாகக் கொண்டார். இறைவன் சுந்தரர்க்கு மாத்திரம் தோழன் அல்ல. எங்கள் எல்லார்க்குமே அவன் தோழன்தான். ஆதலால்தான்

''ஊரில் ஒருவனே தோழன்''

என்ற பழமொழி வழங்குகிறது. எல்லார்க்கும் ஒருவன்தான் தோழன். ஆகவே நாமும் அவனைத் தோழனாகப் பெற்று உய்தி அடைவோமாக.

மணிவாசகப்பெருமான் சன்மார்க்கத்தில் நின்று வழி காட்டியவர். அதாவது தம்மைத் தலைவியராகவும் இறைவரைத் தலைவனாகவும் கொண்டு பக்தி செய்தவர். எல்லா ஆத்மாக்களும் பெண் தன்மை உடையனவே. இறைவன் ஒருவனே ஆண்மகன்; ஏகநாயகன்; ஒப்பற்ற தலைவன். அத் தலைவனே எல்லார்க்கும் நாயகன். நாமும் அவனைத் தலைவனாக ஏற்கும்போது நாம் எல்லாம் தலைவியர்களாக விடுகின்றோம். எமது ஆத்மாவுக்குக் கொழுநன் இறைவனே. எங்களுக்கு வேறு தெய்வ வழிபாடு இல்லை. எமது ஆன்ம நாயகராகிய இறைவரைத் தொழுது எழுந்தால் நாம் மழை பெய்யென்று சொன்ன உடனேயே பெய்யும் அல்லவா?

நால்வர் பெருமக்களும் நான்கு நிலைகளில் நின்று வழி காட்டியுள்ளார்கள். அவர்கள் சொற்படி நடந்தால் எமக்குக் கதி உண்டு. ஆகவே நாம் எல்லோரும் நாலு பேர் சொன்னபடி நடப்போமாக.

---

# அரன் புகழ் பாடுவோம்

(வைத்தியர். கோ. நாராயணபிள்ளை - மண்டூர்)

பாடற்கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர்தம் கூட்டமளிக்கும் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே நீ அஞ்சேலென் மேலாணை கண்டாய்
தேடற்கினிய சீரளிக்கும் சிவாயநம என்றிடு நீறே

என்றும்

பாடுகின்றார் பாடப்பரிசளிக்கும் புண்ணியனே
தேடுகின்றார் தேடநிற்கும் தியாகப் பெருமானே
ஊடுகின்றோ ரில்லாத ஒற்றியப்பா அம்பலத்துள்
ஆடுகின்ற சேவடிகண்டு அல்லலெல்லாந் தீர்ந்தேனே

என்றும் பாடுகின்றார் சமரச சுத்த சன்மார்க்க ஞான வள்ளலாகிய இராமலிங்க அடிகள். அருமையான அன்புப்பாட்டு; இன்பப்பாட்டு; துன்பம் துடைக்கும் பாட்டு. நமது சமய சின்னங்களாகிய விபூதி பஞ்சாட்சரம் முதலியவைகளைப் பாடாத எழுதாத சமயப் பெரியார்கள் நம் மத்தியில் தோன்றியதாக நாமறியோம். நம்மில் யாராவது ஆலயத்திற்கு அடிக்கடி சென்று வழிபட்டால் அண்டையோரும் அயலவரும், எதற்காக ஆலயம் செல்லவேண்டும்? என்ன வரம் கேட்கிறாய்? என்ன வரம் இதுவரையில் பெற்றிருக்கிறாய் என்று கேட்பார்கள். நமது மக்களிற் பெரும்பாலோர் சுயநலவாதிகளே. சுயநலவாதிகளுக்குக் கை மேற் பலன் கிடைக்காது போனால் மனம் திருப்தி அடைவதில்லை. பொது நல நோக்குடைய பெரியார்களோ அப்படியல்ல. குறைந்த நிவேதனம் தானும் கிடையாது விட்டாலும் நாடு நலம் பெறவும் ஆன்மா உய்தி பெறவும் ஆகிய பெரிய தொண்டுகளை ஆற்றியுள்ளார்கள்; ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஆற்றுவார்கள். திருநீறு ஏன் பூசவேண்டும்? மணமுள்ள பவுடர் முகத்தில் தடவினால் முக வசீகரமும் மினுமினுப்பும் ஏற்படும் என்று பத்திரிகைகளிலும் வானொலியிலும் கிடைக்கும் விளம்பரங்களை நம்பிய அளவிற்கு நம் உண்மை அடியார்களின் திருநீற்றைப் பற்றிய பாடல்களைச் செவி

மடுக்கவில்லை. சிவாய நம என்று நீறணிந்தால் பாடுதற்கு இனிமையான வாக்கு சித்தி தருவான் நம் இறைவன். பாலும் சோறும் பசிக்குப் புசித்திடத் தருவான். நன்னெறி கைவரப்பெற்ற நல்லடியார்கள் கூட்டம் தருவான். நல்ல அழகான சாத்வீக குணமும் தருவான். அல்லும் பகலும் அசைந்து கொண்டிருக்கின்ற மனம் நிலைபெற்று நிற்கின்ற சீர்மையும் தருவான், நம் இறைவன் ஆணை என்கின்றது அடிகளுள்ளம். மதுரை என்னும் தில்லையிலும் உள்ளமென்னும் சிதாகாச வெளியிலும் இறைவன் அயராது ஆடிக் கொண்டிருக்கிறான். இந்த அசைவின் பிரதிபலிப்புத்தான் நாம் இடையறாது ஆடிக் கொண்டிருப்பதும். ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை என்கிறார் மணிவாசகனார். இந்த ஆடுகின்ற சேவடியைக் கண்டு விட்டால் நமக்கு யாது குறை, ஊடுகின்றோரில்லாத ஒற்றி அப்பனைத் தேடுகின்றோர், தேட நிற்கும் தியாகப் பெருமானை, சிந்தனையை அவன் தனக்காக்கி சித்தத்தைச் சிவன்பால் வைத்து பக்தி ஆகிய வலையை விரித்துப் பண்பட்ட உள்ளத்தில் பரமனை உறைய வைத்துப் பரவசமடைந்த சான்றோர் மரபில் வந்த நாமல்லவா? ஆறெடுத்துச் சென்ற எங்கள் அப்பருக்காயன்று கட்டுச் சோறெடுத்துச் சென்ற சோதி சொரூபனை தோன்றாத் துணையாகி நிற்கும் நம் ஆருயிர்க்குற்ற துணைவரைப் பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வனை இன்னா செய்தார்க்கும் இனியவையே செய்யும் பெற்றியனை இன்முகங் கொண்டு இனிய பாடல்கள் பாடி இன்மலர் தூவி வழிபடல் நமது தலையாய கடன். ஆடும் பரிவேல் அணிசேவலெனப் பாடும் பணியே பணியாயருள வேண்டுமென்று வாக்குக்கு அருணகிரி கேட்கின்றமை போல பண்ணொத்த இசை பாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன் என ஞானசம்பந்தர் கூறுவது போன்று இசைத் தமிழால் வழிபடும் அடியார்க்கு ஈசன் மண்ணுலக வாழ்வும் தருவான், விண்ணுலக வாழ்வுந்தருவான் என்பது இப்பாட்டின் கருத்து. சித்தமழகாக இருந்தால் இறைவனைப் பாடலாம். நிறைந்த மனமும் நேரிய வாழ்வும் சீரிய பண்பும் பெற்று வாழவேண்டுமானால் காணுதற்கு அரியவனாகியும், கண்ணிற்கு இனியவனாகியும் கருணை நிறைந்தவனாகியும் பிறவிப் பிணிக்கு மருந்தாகியும் விளங்கும் நம் அம்மை அப்பரை அல்லும் பகலும் அன்புடன் அரன் புகழ் பாடுவோமாக.

# திருக்கோவையார்

—( வித்துவான். வசந்தா வைத்தியநாதன் )—

**எண்ணிறைந்த தில்லை எழுகோ புரந்திகழ
கண்ணிறைந்து நின்றருளும் கற்பகமே — நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொல் திருக்கோவை என்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு.**

''சைவத்தின் மேற் சமயம் வேறில்லை'' என்று உறுதியாக அறுதியிட்டுக்கூறும் ஒண்மைப் பொருளுடையது சைவமே. இதுவே உலகின்கண் நிலவும் பல்வேறு சமயங்களினும் தலைசிறந்தது. சைவத்தின் தலைமையினை உலகினர்க்குப் பறைசாற்றுவதே பன்னிரு திருமுறைகள். இவற்றுள் எட்டாம் திருமுறையாக இலங்குவது திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும்.

சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தினுள் ஐம்புல வேடர்களோடு பழகி, அறிவு திரிந்து தனது உண்மை நிலையினையும் கடமையையும் உணராது உழலும் இளங்கோ ஒருவனுக்கு இறைவனே குருவடிவாக எழுந்தருளி ஆட்கொள்வர் என்பதும் அவ்வாறு ஆட்கொள்ளப் பெற்ற ஆன்மாக்கள் பேரின்பம் நுகர்ந்து அரன் கழலை அடையும் என்ற சாத்திரக் கருத்தும் பொதுளி இருக்கக்காண்கின்றோம்.

''ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே''

(சிவஞானபோதம்- உண்மைஇயல்பு, எட்டாம் சூத்திரம்)

எட்டாம் திருமுறையாகிய இவ்விரண்டும் ஐம்புல இன்பங்களில் ஆழ்ந்துழன்று பிறந்ததன் பயனைச் சிறிது மறந்திருந்த ஆன்மாவாகிய வாதவூரடிகளுக்கு இறைவன் குருவாக எழுந்தருளி, மெய்ஞ்ஞானத்தை உணர்த்த, அதன் விளைவாய் எழுந்ததே இப்பெரு நூல்கள். இவை இறைவனது திருக்கரத்தால் எழுதப்பெற்ற பெற்றிமை வாய்ந்தன.

தமிழ்மொழியில் பிற்காலத்தில் தோன்றிய பிரபந்தங்களுள், அகப்பொருள் அமைதிகொண்டு விளங்குவதில் ஏற்றம்பெற்றது 'கோவை' என்ற தொகுப்பாகும். அகப்பொருட் கிளவிகள் நிரல்படக் கோத்தலின் ''கோவை'' ஆயிற்று. கோவை நூல்களுள் மிகத்தொன்மையும் தலைமையும் வாய்ந்தது 'திருக்கோவையாரே' யாகும். இது தலைவன், தலைவியர்க்குரிய களவு, கற்பு என்னும் அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தை இருபத்தைந்து கிளவிகளாகப் பகுத்து நானூறு அகப்பொருட் துறைகளால் கோக்கப் பெற்றது. முற்பகுதியில் சிற்றின்பப் பொருளையும் பிற்பகுதியில் பேரின்பப்பொருளையும் ஒருங்கே விளங்கவைக்கும் அழகு மற்று எந்தக் கோவை நூல்களிலும் காண்பதற்கு அரியதொன்றாகும். இதனை,

''அருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி இவையென மொழிப''

என்றுவருதலால் உணரலாம்.

மேலும் இதில் மணிவாசகர் தன்னைத் தலைவனாகவும், இறைவனைத் தலைவியாகவும் கொண்டு பாக்களை அமைத்திருக்கும் விதம் சைவப்பெருமக்களின் சிந்தனைக்கு ஓர் விருந்தாகும். எழுதாச் சுருதி எனப் போற்றப் பெறும் மறைவல்ல மறையோர் இதனை 'வேதம்' என்பர். சிவானுபவச் செம்மல்கள் இதனை 'ஆகமம்' என்பர். மணியுழை நூல்போன்று உள்ளே நீரோட்டமாகச்செல்லும் இதன் பேரின்பப்பொருளை யறியாதகாமுகர்கள்இதனை'இன்பநூல்' என்பர். தர்க்க நூல் வல்லோர் 'ஏரணம்' என்பர். பைந்தமிழ் வல்லபாவலர்கள் 'இலக்கண நூல்' என்பர். இவ்வாறு வெவ்வேறு கோணங்களினின்று நோக்குவோருக்கு அவ்வப் பொருள்களை நல்க வல்லது இத்திருக்கோவையார்.

''ஆரணங் காணென்பர் அந்தணர்
யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர்; காமுகர்
காமநல் நூலதென்பர்;
ஏரணங் காணென்பர் எண்ணர்;
எழுத்தென்பர் இன்புலவோர்;
சீரணங்,காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே''

(திருக்கோவையார்-நூற்சிறப்பு)

இதில் காணப்படும் குறிஞ்சி முதலிய ஐவகை நிலத்தையும், தலைவன், தலைவி, தோழன், தோழி, செவிலி, நற்றாய் முதலியோரைப் பற்றியும், ஆராயுங்கால், குறிஞ்சி, சுத்த சாக்கிரத்தானமாகவும், பாலை சுத்த சொப்பனத்தானமாகவும், முல்லை சுத்த சுழுத்தித் தானமாகவும், மருதம் சுத்த துரியத்தானமாகவும், நெய்தல் சுத்த துரியாதீதத் தானமாகவும், தலைவி பரம்பொருளாகவும், தலைவன் பக்குவான்மாவாகவும், தோழி திருவருளாகவும், தோழன் ஆன்மபோகமாகவும், செவிலி திரோதாயியாகவும், நற்றாய் பரையாகவும், கொள்ளப்பெறும். இந்நூலின்உரையாசிரியர் பேராசிரியரே. சிலர் நச்சினார்க்கினியர் என்றுகருதுவதுபிழைபட்டதொன்றாகும். இந்நூல்உருகிஉருகிப்படிப்போர்க்குத்தண்ணெனஊறும் தகைமைத்து. இனி இந்நூலுள் காணப்பெறும் சிறந்த இடங்கள் பலவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

இயற்கைப் புணர்ச்சியுள் தலைவியின் அன்பினைத் தலைவன் தன்னுள் கொள்ளுகின்ற இடத்தில், தலைவியின் கண்கள் பிணியாயும், பின் அதற்கு மருந்துமாயுந் திகழ்வதைக் காண்கின்றான்.

''பிணியு மதற்கு மருந்தும்
பிறழப் பிறழ மின்னும்
பணியும் புரை மருங் குற்பெருந்
தோளி படைக்கண்களே''

என்கின்றான். இதனை நாம் வள்ளுவரிடம் உசாவினால்,

''இருநோக்கு இவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக் கொன் றந்நோய் மருந்து'' (காமத்-1091)

''பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து'' (காமத்-1102)

என்று விடையிறுக்கின்றார். மேற்கண்ட திருக்கோவையார் பாடலின் பேரின்பப் பொருள். ''தன்னிடத்திற் கருணை உண்டென் றறிந்தது''.

பாங்கன் தலைவியின் நினைவால் வாடுந் தலைவனைக் காண்கின்றான். தடவரை எனப்படும் தடந்தோள்கள், தளர்வுற்

றதை எண்ணுகின்ருன். தலைவனிடம் சென்று, ''இறைவ!'' சிறை வான் புனல் சிற்றம் பலத்தும், என் சிந்தையுள்ளும் உறையும் செம்மலின் கூடல் மாநகரின் கண், சங்கப்புலவர் ஆய்ந்த அகம், புறமென்னும் குமிழின் துறைவாய் புகுந்து, அதனைக் கற்று இளைத்தாயோ? அல்லது குரல் துத்தம், கைக்கிளை முதலாய ஏழிசையின் சூழல் புகுந்து, மெலிந்தனை யோ? உனக்கு இவ்வாட்டம் வந்துற்றது என்னை என்று கேட்கின்ருன்.

''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கோ
லாம் புகுந் தெய்தியதே''.

அடுத்து உற்றதுரைத்தல் என்ற துறையில் ஒந்திக்கு அஞ்சும் மஞ்ஞை, விலங்கினங்களிலேயே பெரிய உருவத்தையு டைய யானையையும் அச்சுறத்தவல்ல பாம்பினைப் பிடித்து அதன் படத்தைக் கிழிக்கின்றது என்று கூறுவது, விலங்கி யலில் ஆசிரியருக்குள்ள பரந்துபட்ட அறிவினைக் குறிக்கின் றது. இதற்குப்பல சான்றுகள் தரலாம். விரிவஞ்சி அவற் றை விடுகின்றேன்.

மாணிக்கவாசகர் இறைவன் தன்னை வலியவந்து ஆட் கொண்டதனை,

''பொய்வா னவரிற் புகாது தன்
பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்''

என்பதனுல் வெளிப்படுத்துகின்ருர்.

அடுத்து நாண நாட்டம் என்ற கிளவியுள் ''காகத்தி னிரண்டு கண்ணிற்கும் மணியொன்றே ஆனற்போல, தலை வன், தலைவி இருவரது உடலுள் உயிர் ஒன்றே ஆனது'' என்கின்ருர்.

''காகத் திருகண்ணிற் கொன்றே
  மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம்
  யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி
  லம்பல வன்மலையில்
தோகைக்கும் தோன்றற்கு மொன்றாய்
  வரு மின்பத் துன்பங்களே'' இந்தக் கருத்தினை

''ஆனந்த வெள்ளத் தழுந்துமோர்
  ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத்
  தாலொக்கும்'' (திருக்கோவையார் - 307)

''இவன்வயிற் செலினே இவற்குடம்பு வறிதே
இவன்வயிற் செலினே இவட்கு மற்றே
காக்கை யிருகணி னொருமணி போல
குன்றுகெழு நாடற்குங் கொடிச்சிக்கு
மொன்று போன் மன்னிய சென்றுவா ழுயிரே''
(தொல், களவியல்-சூ 114 - மேற்கோள்)

என்ற இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன.

பெண்ணின் கண்களை கவிவாணர்கள், மானென்றும், அயிலென்றும், கயலென்றும், கருந்திராட்சைப் பழமென்றும் வர்ணிக்கின்றனர். ஆனால் நமது அடிகளாரோ தமக்குப் புதிய பாதையையே வகுத்துக் கொண்டு விட்டார். ஊனப்பொருளினும் ஞானப்பெரு நிலையையே காண்கிறார். ''கண்ணயந்துரைத்தல்'' என்ற துறையுள், தலைவியின் கண்களைப் புகழுமிடத்து,

''கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின்
வெண்மை, கருமை, செம்மை யகல
நீள மொளியென நிகழ்த்துவர் புலவர்''

என்ற இலக்கண வரம்பையொட்டி ஈசனிடத்து யான் வைத்த அன்பைப் போன்று **அகன்றும்** அவனால் வாங்கப் பட்ட என் பாசம் போலக் **கறுத்தும்**, அவனது தில்லையைப்போன்று ஒளி மிகுந்தும், அவனது திருத்தோள்க

ளிலே பூசப்படும் வெண்ணீற்றினைப் போன்று **வெளுத்தும்** அவனது கொய்ம்மலர்ச் சேவடிகளைப் போற்றியாம் பேசும் அத்திரு வார்த்தைகளைப் போன்று **நீண்டும்** காணப்படு கின்றது'' என்கிறார்.

ஈசற் கியான்வைத்த அன்பி
 னகன்றவன் வாங்கியவன்
பாசத்திற் காரன் றவன் தில்லை
 யின்னொளி போன்றவன் தோள்
பூசத் திருநீ றென வெளுத்
 தாங்கவன் பூங்கழல் யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
 நீளம் பெருங் கண்களே''

''குறியிடத்துக் கொண்டு சேறலில்''

''வினைவளம் நீறெழ நீறணி யம்பலவன்''

என்று சுட்டுகின்றார். நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணைக் கும் எழிலுடைமையின் அக்கோலம் தொழுதெழுவாருள் ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ளவினை நீறுகுமென் னுங் கருத்துட்பட ''வினைவள நீறெழ நீறணியம்பலவன்'' என்கின்றார்

''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண்டாங்கு'' (சிதம்பர மும்
மணிக்கோவை 1 - 14 - 15)

புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற்போல தொழு தெழுவார் வினைக்குத் தான் நீறணிகின்றார். மேலும்,

''மடை மாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே''

என்ற குறுந்தொகைக் கருத்தைத் தொடுகின்றார்போல்,

''வேயாது செப்பின் அடைத்துத்
தமிவைகும் வீயினன்ன'' என்று தலைமகனைப் பரத் தையர் வசம் புனலாட விட்டுச் சூடுவாரின்றிச் செப்பின் கணிட்டடைத்துத் தமியே வைகும் பூப்போல வாடுகின் றாள் தலைவி என உரைக்கின்றார்.

இது போன்று சிறந்த சாத்திரக் கருத்துக்களையும், இலக்கிய நயங்களையும், இயற்கை வர்ணனைகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது திருக்கோவையார்.

''வருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத் தோன்றி
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளியையுடைத் தாகி
மருவாருங் கிளவியிதழ் நாநூறு ஆகி
மதுப்பொருள்வாய் மதிப்புலவர் வண்டாக உண்ணத்
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனுமிரவித் தன்கதிரால் அலரும்
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடிதா மரைசாத்துந் திருவளர்தா மரையே''

என்ற தனிப்பாடல் திருக்கோவையாரின் சிறப்பினை ''குன்றிலிட்ட விளக்கென'' ஒளிரச் செய்கின்றது.

## கூட்டு வழிபாட்டின் அவசியம்

(குருதேவர் ஸ்ரீ சிவானந்த மஹரிஷி)

கலியுகத்தில் சங்கசக்தி அதிக வலிமை வாய்ந்தது. மக்கள் ஒன்று கூடி நடத்தும் கூட்டு வழிபாடுகளில் பங்கு பற்றுவோர் அத்தனை பேருடைய சக்தியும் சேர்ந்து ஒவ்வொருவருக்கும் பயன்படுகிறது. மக்கள் ஒன்று கூடி இறைவனுடைய திருநாமங்களைப் பாடிப் பிரார்த்தனை செய்யும் போது அங்கு ஒரு தெய்வீக அருட்பிரவாகம் தோன்றுகிறது. அனைவரும் ஒரு சத்சங்கமாகக் கூடி வழிபாடு செய்வீர்களாயின் அதிசயிக்கத்தக்க வகையில் நீங்கள் முன்னேறுவீர்கள்.

எனவே கூட்டு வழிபாடுகளில் ஈடுபடுங்கள். ஆத்மீகத் துறையில் நாட்டமுள்ள சில நண்பர்கள் ஒன்று சேருங்கள். கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்துங்கள். கூடியிருந்து இறைவன் திருநாமத்தைப் பாடுங்கள். ஒன்றுகூடி ஆத்மீக நூல்களை ஓதுங்கள்.

இறைவன் உங்கள் அனைவருக்கும் அருள் புரிவாராக!

# ஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி

புன்னகை தவழும் பொன்முகத் திருவோன்
பொலிமிகு நல்லறி வாளன்
அன்னையின் அன்பும் அருள்வளர் நெஞ்சும்
அப்பரின் பணிநல வளமும்
முன்னிய முனிவன் சிவ சிவானந்தம்
முப்பொருள் வைப்பெனும் செல்வன்
என்னுளங் கலந்த இளம் பெருந் துறவி
இனுமினும் சிவம்பெற வாழ்க!

—சுத்தானந்தர்.

ஸ்ரீநிவாசராவ் தென்னிந்தியாவில் ஒருபெரிய ஜமீந்தார். பலகிராமங்களும் ஏராளமான விளைநிலமும் அரண்மனை போன்ற பங்களாக்களும் அவருக்குச் சொந்தமாயிருந்தன. அவரது மனையாளான சரோஜினி நற்குணங்களே உருவான ஓர் இலட்சியத் தாய். அவர்களது தவப்பயனால் 1916ம் ஆண்டு ஜூன் மாதம் 24ந்திகதி அவர்களுக்குப் புதல்வராகப் பிறந்தவரே ஸ்ரீ சுவாமி சிதானந்தர்.

ஸ்ரீதர்ராவ் என்பது சிதானந்தரின் பிள்ளைத் திருநாமம். வீட்டினர் அவரைச் செல்லமாக சித்தா என்று அழைப்பது வழக்கம். பிறவியிலேயே அவர் ஒரு சித்தராக விளங்கிய மையை அப்பெயர் குறித்தது. சுவாமி சிதானந்தர் தமது சென்ற பிறவியிலே ஒருமாபெரும் யோகியாக இருந்தார் என்று சோதிடத்தில் வல்லவரான ஒருயோகி 1949ஆம்ஆண்டில் கூறினார். சுவாமி சிதானந்தரை ஒரு முறையேனும் தரிசித்தவர்கள் அவர் சென்ற பிறவியில் மட்டுமின்றி பல பிறவிகளில் யோகியாக விளங்கியிருக்க வேண்டும் என்று கருதுவார்கள்.

துருவன், மார்க்கண்டேயன் போன்றோர் கதைகளைக் கேட்கஸ்ரீதருக்கு மிகவும் ஆசை. தவம் செய்ய வேண்டும், ஒரு ரிஷியாக வேண்டும், இறைவனைக் காண வேண்டும் என்ற இலட்சியங்கள் ஸ்ரீதரின் இளம் உள்ளத்தில் வேரூன்றி யிருந்தன. ஸ்ரீதர் மங்களூரில் ஆரம்பக்கல்வியும் சென்னை முத்தையா செட்டி உயர்நிலைப் பள்ளியில் உயர்தரக் கல்வியும் கற்றார். அவரது தூய ஒழுக்கமும் சிறந்த பண்புகளும்

அவரது சகமாணவர்மட்டுமன்றி ஆசிரியர்களும் அவர் பால் விசேட அன்பும் மதிப்பும் வைக்கக் காரணமாயிருந்தன. 1936ஆம் ஆண்டு சென்னைலோயலாக் கல்லூரியில்சேர்ந்து இரண்டு ஆண்டுகளில் பட்டதாரியாக வெளியேறினார்.

ஸ்ரீதரின்உடன்பிறந்தோர் நால்வர். அவர்வீட்டில் அனைவரும் தூய நன்னெறியில் வாழ்ந்து வந்தனர். தருமமும் சேவையும் அக்குடும்பத்தில் ஒவ்வொருவரிடம் காணப்பட்ட நற்பண்புகளாகும். ஸ்ரீதரோ இந்தப் பண்புகளேஉருவெடுத்தவராய் விளங்கினார்; உதவிநாடி அவர் வீட்டுக்குச் சென்றவர் எவரும் வெறுங்கையோடு திரும்பியதில்லை. பிறர்துயர் கண்டு இரங்குவதும் துன்பமுற்றோருக்குச் சேவைபுரிவதும் ஸ்ரீதரிடம் இயல்பாகவே அமைந்திருந்த குணங்கள். தொழு நோயாளருக்கு தொண்டுபுரிவதுஅவரது இலட்சியமாகவிளங்கியது. அவர்களுக்காகத் தமது வீட்டைச் சுற்றிலுமிருந்த பரந்த வெளியில் குடிசைகள் அமைத்துத் தெய்வங்களைஉபசரிப்பது போல் அவர்களை உபசரித்துப் போஷித்துவருவார்.

மற்றவர்கள் நெருங்கவும் அஞ்சும் கொடிய நோயாற் பீடிக்கப் பட்டவர்களுக்கும் அவர் கனிந்த உள்ளத்துடன் சிகிச்சை அளிப்பார். அப்போது அவரைப் பார்த்தால் தம் இஷ்டதேவதைக்குப் பூஜை செய்பவரைப் போலக் காணப்படுவார். ஆச்சிரம வாசிகளுக்கு ஏதேனும் நோய் அல்லது துன்பம் என்றால் வேறு எத்தகைய முக்கிய அலுவல்களிருந்தாலும் அவற்றைத்தள்ளி வைத்துவிட்டு அவர்களது துன்பத்தைத் துடைக்க முன்வருவார். அவரது சேவை உணர்ச்சி மனிதர்களோடு மட்டும் நின்று விடவில்லை. பறவைகளும் மிருகங்களும் மனிதர்களைப் போலவே அவரது கருணைக்குப் பாத்திரமாயின. அவற்றின் துன்பக்குரல் அவருக்குத் தெரிந்தது. கடும் நோயுற்ற நாய் ஒன்றுக்கு அவர் சிகிச்சைஅளித்துக் குணப்படுத்தியதைக் குருதேவரே பாராட்டியுள்ளார். ''சிதானந்தர் நாயிலும் இறைவனைக் காண்கிறார்'' என்று அவரது வெற்றியின் இரகசியத்தைக் குருதேவர் எடுத்துக் கூறினார்.

பெரிய லட்சாதிபதியின் குடும்பத்திலே பிறந்திருந்த போதிலும் இளமையிலிருந்தே ஸ்ரீதருக்கு உலக இன்பங்களிலுங் கேளிக்கைகளிலும் நாட்டஞ் செல்லவில்லை. பிறருக்குச் சேவை செய்வதற்கு அடுத்தபடியாகத் தனித்திருந்து தியா

னம் செய்வதை அவர் பெரிதும் விரும்பினுர். படிப்பிலே கூடப் பள்ளிப் பாடநூல்களைவிட ஆன்மீக நூல்களுக்கே அவர் முதலிடமளித்தார். அதிலும் ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், சுவாமி சிவானந்தர், ஆகியோரின் நூல்களைமிகுந்தஆவலுடன் கற்ருர். அன்பு, தூய்மை, சேவை ஆகியநற்பண்புகளின் உயர்வைப்பற்றி அவர் பிறருக்கு எடுத்துக்கூறுவார். ராமஜெபம் செய்யுமாறு அனைவரையும் தூண்டுவார்.

1936ஆம் ஆண்டு ஸ்ரீதர் தம் வீட்டைவிட்டு எங்கோ போய்விட்டார். குடும்பம் முழுதும் துயரத்தில் ஆழ்ந்தது. திருப்பதிக்கருகில் ஒரு ஆச்சிரமத்தில் அவர் இருப்பது தெரிய வந்தது. ஸ்ரீதர்வீட்டுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். திரும்பிவந்தபின் அவர் வீட்டிற் கழித்த ஏழு ஆண்டுகளும் தன்னலமற்றசேவை, ஆத்மீகநூல்களை ஆழ்ந்து கற்றல், கடுந்தவம், ஆழ்ந்த தியானம் ஆகிய தீவிர சாதனைகளில் கழிந்தன.

நன்குசிந்தித்தபின் துறவறவாழ்க்கையை மேற்கொள்வதென ஸ்ரீதர் தீர்மானித்தார். 1943ல் ஸ்ரீ சிவானந்த ஆச்சிரமத்தில்சேர்ந்துவிட்டார். ஆச்சிரமத்திற் சேர்ந்ததும் அங்குள்ள இலவசவைத்தியசாலையின்பொறுப்பைஏற்ருர். தனது குருவைப்போலவே தமதுவசதிகளையும்கவனிக்காமல் நோயாளிகளின் பக்கத்தில் இரவுபகல் என்றுபாராமல் விழித்திருந்து சேவை புரிந்துவந்தார். 1948ஆம் ஆண்டில் யோக வேதாந்த ஆரணிய கலாசாலை நிறுவப்பட்டபோது சுவாமி சிவானந்தர் அவரை உபஅத்தியட்சராகவும் ராஜயோகப் பேராசிரியராகவும் நியமித்தார். 1948ஆம் ஆண்டில் ஸ்ரீதர் திவ்ய ஜீவன சங்கத்தின் பொதுக்காரியதரிசியாகநியமிக்கப்பட்டு உலகெங்குங்கிளைகளைக் கொண்ட அம்மாபெரும் ஸ்தாபனத்தைத் திறம்பட நிர்வகித்து வரலானுர். 1949ஆம்ஆண்டு ஜுலைமாதம் 10ம் திகதி குருபூர்ணிமைத் தினத்தன்றுஸ்ரீதர் சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசதீட்சை பெற்றுக்கொண்டார். சுவாமி சிதானந்தர் என்றதிருநாமம் அவருக்குச் சூட்டப்பட்டது. 1959ஆம் ஆண்டில் சுவாமி சிவானந்தரின் பிரதிநிதியாக அமெரிக்கா சென்றுஅங்கு யோகமார்க்கத்தைப் பரப்பினுர். ஐரோப்பாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்து 1962ஆம் ஆண்டில்சிவானந்த ஆச்சிரமத்துக்குத் திரும்பினுர். பின்னர் தென்னிந்தியாவில் ஸ்தலயாத்திரை செய்துவிட்டு 1963ஆம் ஆண்டுஜுலைமாதம் சுவாமி சிவானந்தர் மகாசமாதி அடைவதற்குச் சில நாட்களுக்குமுன் குருதேவரோடு வந்து சேர்ந்துகொண்டார்.

1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சுவாமி சிவானந்தரின் இடத்தில் சுவாமி சிதானந்தர் திவ்யஜீவன சங்கத்தின் தலைவராகவும் யோக வேதாந்த ஆரணியகலாசாலையின்அத்தியட்சகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ''சுவாமி சிதானந்தரை நானே என்குருவாக மதிக்கிறேன், அவரிடமிருந்து நான் பலபாடங்கள்கற்றுக் கொண்டிருக்கிறேன்,அவரைமதித்துப் போற்றுகிறேன், அவர் அறிவு விசாலமானது, அவரது அன்பு எல்லையற்றது'' என்றுசுவாமி சிவானந்தர் அவர்களே ஒருமுறை கூறியுள்ளார்.

# தினசரி கூட்டுவழிபாடு

(ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி, ரிஷிகேசம்)

அன்பர்களே!

நீங்கள் ஒவ்வொருவரும் நாள்தோறும் கூட்டு வழிபாடுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் வருடத்தில் 365 சத்சங்கங்களில் தவறுது பங்குபற்றுங்கள். ஏற்கெனவே நடைபெறும் வார வழிபாடுகளோடு மட்டும் நின்றுவிடாமல் தினமும் குறைந்தது 40 நிமிடங்களையாவது சத்சங்கத்தில் கழியுங்கள். கீர்த்தனை, அருள் நூல்களை ஓதுதல், தியானம், பக்திப் பாடல்கள் ஆகிய அம்சங்களைக் கொண்டதாக உங்கள் சத்சங்கம் அமையலாம். தீபாராதனையும் சாந்தி பாடமும் முடிந்த பின்புதான் சாதகர்கள் தங்கள் இடங்களை விட்டு நீங்க வேண்டும். சத்சங்கத்தில் ஆரம்ப முதல் இறுதிவரை எவ்விதமான பேச்சுக்கோ வாதங்களுக்கோ இடமில்லை. அன்பர்கள் வந்து கூடியதும் பரிபூரண அமைதியும் தெய்வீகமும் நிலவுவது முற்றிலும் அவசியமாகும். வழிபாடு முடியும் வரை இந்த அமைதி குலையக் கூடாது. கூட்டுவழிபாட்டிற்கு மிகப் பொருத்தமான நேரம் அதிகாலை 6 மணியாகும். நீங்கள் ஒவ்வொருவரும் தினசரி கூட்டு வழிபாட்டில் தவறுது பங்குபற்றுகிறீர்கள் எனக்கேட்டு மகிழ விரும்புகிறேன்.

அனைவரும் குருவருளுக்கும் திருவருளுக்கும் பாத்திரராவீர்களாக!

# தளவாய் நகர்
# ஸ்ரீ முத்துமாரியம்மன் துதியமுது!

— 'பாலபாரதி' —

புன்னைமலர் பொன் மணம்பரப்ப,
புனிதத் தென்றல் தேன்நிரப்ப,
தென்னை, தேமா, செழுங்கதலி,
தேனூர் பொழில்சூழ் பதிஇலங்கும்
அன்னை, முத்துமாரி எனும்
அகிலம் புரக்கும்நாயகீ! யான்
கன்னித்தமிழில் இசைத்திடும், புன்
கவிதை மலரை ஏற்றருளே!

அழகார் முல்லை முறுவலிக்க,
ஆம்பல் விரிந்து அஞ்சலிக்க
வளமார் இனிய காட்சிதரும்
வயல்சூழ் செந்நெற்கதிர் குலுங்கும்
**தளவாய் நகரில்** இனிதமர்ந்து
தலங் கொண்டிலங்கும் சிவசக்திக்
கனலார் சுடரே! யான் சூடும்
கவிதை மலரை ஏற்றருளே!

திங்கள் வானில் தவழ்ந்து வர,
தேனூர் குயில்கள் பாட்டிசைக்க
சிங்கப் படைபோல் ஆர்ப்பரித்து,
சீறிக்குதித்து, அலை எறிந்து,
பொங்கும் கடல்சூழ், திருநகரில்
புவனம் போற்ற எழுந்தருளும்,
பங்கைத் திருவே! அருட்சோதீ!
பாலித் தருள வேண்டுவனே!

வீதிப் புறத்தை அலங்கரித்து
விந்தை அழகுக் கோலமிட்டு
சீதச் செழுந்தேன் மலர்பறித்து
சிரத்தில் வைத்து அஞ்சலித்தே,

கோதி முடித்த குழல் மாதர்,
குரவை பாடி வாழ்த்திசைக்க,
சோதிவடிவாய் இலங்கு மெழிற்
சுடரே! என்றும் துணைபுரியே!

முத்தும் மணியும், அலையிடையே
மோதிப் புரண்டு கரைமேவித்
தத்தும், வளப்பொன் திருநாடாம்
தளவாய் நகரில் பதிகொண்டு
தொத்தும் துயரம், பிணிவறுமை,
துன்பம் அகற்றி, அன்பர்தமை
நித்தம் அணைத்து அருள்வழங்கும்
நிறைந்த கருணை வாருதியே!

நெஞ்சில் ஆண்மை வீறளிக்கும்,
நிகரில் ஞானப் பேறளிக்கும்,
வஞ்ச இருளை ஓட்டி, நிதம்
வாழ்வில் அமரஒளி ஏற்றும்!
நஞ்சை அமுத மாக்கிவிடும்,
நமனை நடுங்க வைத்துவிடும்!
செஞ்சொற் கவிதை பொங்கிவரும்,
தேவி பாதம் தொழுபவர்க்கே!

பக்திக் கமுதே! மெய்யடியார்
பாவம் அறுக்கும் பரஞ்சுடரே!
வித்தைக் கினிய கலைஞான
வீரக் கனலார் விண்ணமுதே!
சுத்தசக்திச் சுடர்க் கொழுந்தே!
துரிய மோனப் பேரொளியே!
பித்துச் சிறியேன் களிப்புறவே,
பேரின்பத்தேன் புகட்டா யோ?

இரும்பின் வலியார் நெஞ்சையெலாம்
இளக்கி, உருக்கி, நெகிழவைக்கும்
கரும்பே! ஞானக் கற்பகமே!
கனியே! கருணைத் தடங்கடலே!
விரும்பும் அடியர் துயர்களைந்து,
வேண்டும் வண்ணம் அருள்பொழியும்
நறும்பே ரமுதே! உனைத்தொழுது
நண்ணும் வண்ணம் நானறியேன்!

அறியாப் பேதை, தலைக்கனத்தில்
அவமே காலம் கழிக்கின்றேன்!
வெறியன் போன்றிவ் வுலகினிலே,
விலங்கு மனத்தோடே உழன்று,
பொறிவாய் ஐந்தின் மயக்கினிலே
புரண்டு புன்மைச் சேற்றினிடை,
தறிவாய்ப் பாபோல் தவிக்குமெனைத்
தாயே! அணைத்தல் கூடாதோ!

கூடா வஞ்சர்—நஞ்சுநிகர்
கொடிய மனத்தர், நட்புறவால்,
கேடாய் அலைந்தே, மதியிழந்து
கெட்டேன்; துயரம் பட்டலுத்தே,
தேடாப் பொருளாய் எங்கெங்கோ,
தெருவாய் அலையும், சிறியன் எனை,
'வாடா' என்று அருகணைத்துன்
மருங்கில் இருத்தல் ஆகாதோ?

'ஆகாக் குழந்தை' இவன் என்று
அன்னை ஒதுக்கித் தள்ளுவ ளோ?
ஏகத் தனிமைக் கொடுமையிலே,
எண்ணி லடங்காத் துயர் நெருப்பில்
வேகி, நெஞ்சந் தவிப்புற்றே,
வேண்டி உன்னைக் கூவுகிறேன்;
பாகார் கருணைப் பெருங் கடலே!
பாலித் தருள வேண்டுமம்மா!

அம்மா சுத்த சக்தி! உல
கனைத்தும் ஈன்ற பேரிறைவீ!
இம்மா நிலத்தில் யாஞெருவன்
இழிவும், மெலிவும் மிக எய்தி,
சும்மா, சோற்றுப் பொதி மாடாய்
சுமையாய், மண்ணில் கிடந் துழலும்
பொம்மை, எனக்குன் அருட்காந்தப்
புனிதத் தேனைப் பொழிகுவையே!

**குறிப்பு:—** மட்டக்களப்பு, ஏருவூர், 3-ம் குறிச்சி, தளவாய் நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய உற்சவம், இம் மாதம் நடைபெறுவதை முன்னிட்டு இப் பாடல் எழுதப்பட்டது.

## "சிதானந்தஜியைப் பின்பற்றுங்கள்"

(சுவாமி சிவானந்தா)

ஸ்ரீ சிதானந்தஜியின் பிறந்த நாளைக் கொண்டாடுவது ஈஸ்வரனை வணங்குவதற்கு ஒப்பானதாகும். பெரியோர்களின் ஜயந்திகளைக் கொண்டாடும் பொழுது அவர்களுடைய நற் செய்கைகள், நல்லெண்ணங்கள், நற்போதனைகளை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த நல்ல குணங்களை நீங்களும் உங்கள் வாழ்வில் செயல்படுத்த முற்படுவீர்கள்.

சிதானந்தஜீ வைராக்கியத்துக்கும், கருணைக்கும், பணிவுக்கும் இருப்பிடமாகத் திகழுகிறார். தன் முற்பிறப்பிலேயே அவர் ஒரு சந்நியாசியாகத் திகழ்ந்தார். அதனால் தான் சிறு வயதிலேயே தெய்வீக வாழ்வில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது.

இப் பிறப்பிலேயே நற் பண்புகளை, கடவுள் தன்மையை அப்பியசித்து வருவோர் அடுத்த பிறப்பில் துறவிகளாகத் திகழ்வர். சிதானந்தஜியை உதாரண புருஷராகக் கொள்ளுங்கள். அவரைப் போலப் பிரகாசிப்பீர்கள்.

(சுவாமி சிதானந்தரின் ஜயந்தி தினத்தில் குருதேவர் நிகழ்த்திய சொற்பொழிவு)

---

# குரு வேறு தெய்வம் வேறல்ல

(ஸ்ரீ சுவாமி பிரணவானந்த சரஸ்வதி)

குரு வேறு கடவுள் வேறென்று நாம் எண்ணலாகாது. குருவைக் கடவுளாகக் காணுகின்றவர்கள் வாழ்க்கையில் வெகு துரிதமாக முன்னேறுகிறார்கள். ஆதலினால்தான் மாதா, பிதாவுடன் குருவுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஆன்றோர்கள் சொல்லி வைத்தார்கள்.

அரிச்சுவடி கற்பிக்கும் ஆசான் தொடக்கம் அறிவை வளர்க்கத் துணை புரியும் அத்தனை பேரும் ஒருவனுக்கு வழிகாட்டிகளே. ஞானகுரு ஒருவரை அடையப் பாக்கியம் செய்த ஒருவன் கூடத் தனக்கு முதலில் அறிவூட்டியவர்களை உபகுரவர்கள் அல்லது வழிகாட்டிகளாக மதிக்க வேண்டும்.

நாம் ஒரு மாபெரும் ஞானி வாழ்ந்த காலத்தவர்கள் என்று சொல்வதில் பெருமை கொள்ள வேண்டும். உலகிற்கு ஞான ஒளி பரப்ப அயராது தொண்டு செய்த எமது குருதேவர் ஸ்ரீ சிவானந்த மஹரிஷிகள் மறைந்ததும் தெய்வீக வாழ்க்கைச் சங்க அபிவிருத்தி அது ஆற்றிய சமயப் பணி குறைந்து விடுமோ என்று பலர் அஞ்சினுர்கள். ஆனுல் நாம் ஒரு விடயத்தைத் துணிந்து கூறலாம். அதாவது ஒரு மகான் உடலை நீத்த பின்னர்தான் அவருடைய சக்தி உலகெங்கும் பரந்து அருட் பணிகளுக்கு உறுதுணை புரிகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் மறைந்த பின்னர்தான் ராமகிருஷ்ணமிஷன் தோன்றி அரும்பணியாற்றுகின்றது.

தற்போது ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கை மூல சங்கத் தலைவராகிய சுவாமி சிதானந்தஜி மஹராஜ் குருபக்தியே உருவெடுத்தாற் போன்ற ஒரு மகான். ஸ்ரீ சிவானந்த மஹரிஷிகளாலேயே "எனது குருநாதர்" என அழைக்கப்பட்ட இவருடைய பெருமையை இவரைத் தரிசித்த அனைவரும் நன்கு அறிவர். இந்த மகானின் தலைமையின் கீழ்த் தெய்வீக வாழ்க்கைச் சங்கமானது தொடர்ந்து உலகிற்கு வழிகாட்டியாகத் திகழும் என்பது நிச்சயம்.

---

# இமயச் சுடரே வருகவே!

— சி. பொன்னுத்தம்பி —

வையம் சிறக்கவந்த, சுடர்
மதியே! ஞான வானமுதே!
தெய்வக் கனலே! சிதானந்தத்
தேனே! இமயச் செழுங்கதிரே!

துய்யதவத்தின் உருவே! மெய்த்
துறவின் வடிவே! வையகத்தின்
உய்வுக் குதித்த குருவே, எம்
உள்ளம் துதிக்க வருகவே!

நிலவு பூத்த எழில் வதனம்,
நீறுபூத்த அழகு நுதல்,
உலகில் கவிந்தபவ இருளை
ஒழிக்கும், ஞானத்திருவிழியில்
பொலியும் கருணைக் காந்தஒளி!
பொங்கும் அழகுப் புன்னகையோ (டு)
டிலகும் புனித சிதானந்த
இமயச் சுடரே வருகவே!

அன்பு மலர, பேரான்ம
அறிவு மலர, மனிதகுலப்
பண்பு மலர, இறை உணர்வுப்
பக்தி மலர, வையமெலாம்
இன்பம் மலர, அன்பர்கள் தம்
இதயம் மலர, எழுந்த சுடர்
விண்பே ரொளியே! சிதானந்த
விளக்கே! வருக, வருகவே!

அருணச் சுடரே! புனித நறும்
அறிவுப் புனலே! நாத்திகப்பே
ரிருளைக்கிழிக்கும் அருள் ஞான
இமயச் சுடரே, அகந்தையர் தம்
மருளைக்களைந்து, வாழ்வளிக்கும்
மதியே! இன்ப வாழ்வருளும்
கருணைக் கடலே! சிதானந்தக்
கனியே! வருக, வருகவே!

குருவே, வருக! சிவ ஞானக்
கொழுந்தே வருக! மெய்த்தவத்தின்
உருவே வருக! அடியவர் தம்
உறவே வருக! மாசறுக்கும்
அருளே வருக! அகம் நிறைந்த
அன்பே வருக! அருள் கனிந்த
திருவே வருக! சிதானந்தத்
தேனே வருக! வருகவே!

# பூனையின் பல்லும் மனிதனின் மனமும்!

( தி. கி. லக்ஷ்மி, மதுரை. )

பூனையின் பல்லிற்கும், மனிதனின் மனதிற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஆச்சரியமாகவல்லவோ இருக்கின்றது. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் என்ன சம்பந்தமோ அதுபோல்தான் இதுவும். இல்லைஇல்லை இதை எழுதியவர்க்கு கொஞ்சம் மூளை...... என்று தானே நினைக்கின்றீர்கள். தவறு ...... உண்மையாகவே இரண்டுக்கும் தொடர்பு உண்டு என்பதை கடைசிவரை படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

பூனை ஒன்று ஆ என்று வாயைத் திறக்கின்றது. அப்பப்பா!! என்ன பயங்கரம்! அந்த கோரைப் பற்களைக் காணவே பயமாக இருக்கின்றது. ஒரு எலியானது வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இதைக் கண்ட பூனை ஒரே தாவு தாவி அந்த எலியின் கழுத்தை அந்த கோரைப் பற்களினுல் கவ்விப் பிடித்தது. பாவம் எலியானது திமிறி வெளியேற முடியாது தவியாய்த் தவித்தது. பூனையின் வாயில் அகப்பட்ட எலியின் உயிர் தப்புமோ? சிறிது நேரத்தில் அந்த எலி பூனைக்குப் போஜனமாகியது.

அதே பூனை சிறிது நேரம் கழித்து எங்கிருந்தோ எதையோ தன் வாயில் கௌவிக் கொண்டு வந்தது. அது என்ன? உற்று நோக்குவோம்! ஆம் வேறு ஒன்றும் இல்லை; பூனைக்குட்டிதான். என்ன? எலியை தின்பது பூனையின் வழக்கம், ஆனுல் பூனைக்குட்டியையும்...... இல்லை இல்லை...... தன் குட்டியை வாயில் கௌவிச் சென்று பாதுகாப்பான இடத்தில் விடுவதற்காக எடுத்துச் செல்கின்றது.

இப்பொழுது நாம் தெரிந்து கொள்ள வேண்டியது பூனையின் கோரைப் பற்கள் நல்லதா? கெட்டதா?

எலியைக்கேட்டால், ஐயோ மகாகொடூரமானது; மிக்க அபாயமானது; என்று கூறும். ஆனுல் பூனையின் குட்டியோவென்ருல் ஆஹா! என் தாயின் கோரைப் பற்கள் மிகவும் இதமானவை என்று கூறும். பூனை தன் பற்களை உபயோகிக்

கும் முறையினுல் நல்லதாகவும், கெட்டதாகவும் மாறுபடு கின்றது. அதுபோல,

கொள்ளைக்காரன் ஒருவன் மக்களை மிகவும் கொடுமைப் படுத்தியும், கொலை செய்தும் அவர்களிடமிருந்த பொருள் களை வழிப்பறி செய்தும் வந்தான். வழிப்பறி செய்யும் எண் ணத்தின் காரணமாக குழந்தை என்றும், கர்ப்பிணி என்றும், முதியோர் என்றும், பிணியாளர்கள் என்றும், சக்தியற்றவர் கள் என்றும், பேதமில்லாமல், பொருள் பறிப்பதையே குறிக் கோளாகக் கொண்டு அவர்களை துன்புறுத்துவான். கிடைத்த பொருள்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று, தன் அருமை மனைவியிடம் அளித்து, அவள் ஆனந்தப்படுவதைக் கண்டு மனம் மகிழ்வான். தன் குழந்தைகளிடத்திலோ அபார அன்புடையவன். தன் குழந்தைகளுக்கு உற்றசிறிய துன்பத் தையும் காணப் பொறுக்கமாட்டான். தன் மனைவி மக்களை மகிழ்விப்பதற்காக தன் உயிரையும் தியாகம் செய்வதற்கு தயங்கமாட்டான்.

என்ன அநியாயம்! தன் மனைவி மக்கள் சிறிதுகூட துன் பம் அடைவதைக் காணச்சகியாத இவன் மற்ற மக்களெல் லோரையும் இரக்கமின்றி வதைப்பானேன்?

**''தன்னுயிர்க்கு இன்னுமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க்கு இன்னு செயல்''** (குறள்)

ஆம், காரணம் இருக்கின்றது. தன் மனைவி மக்களை தன் உயிரினும் உயர்வாக எண்ணி அன்பு காட்டும் காரணத்தினுல் மனம் நெகிழ்ச்சி அடைந்து, அன்பு ஊற்று ஆருகப் பெருகிப் பாய்ந்துவர தன்னையும் வருத்திக் கொண்டு அவர்களை மகிழ் விக்கிருன். அதே மனிதன் மற்ற ஜனங்களைக்கண்டதும் தன் மனைவி மக்களின் நலனே பெரிதாக மனதில் கொண்டமை யால் அவர்களிடத்திலே அன்பு சுரக்காமல் ஈவு இரக்கமின்றி துன்பம் இழைக்கத் துணிகின்றுன். இப்பொழுது மனிதனின் மனம் நல்லதா கெட்டதா?

ஆராய்ந்து பார்ப்போமானுல் அவர்களுக்கு பிரியமான வர்களுக்கு நல்லதாகவும், விரோதிகளுக்கு கெட்டதாகவும் காணப்படுகிறது. ஒரு மனிதனை கீழ்நிலைப்படுத்தி தீயசெயலை செய்வதற்கு உதவியாக இருப்பது தன்னலம், அல்லது தன்

னைச் சேர்ந்தவர்களிடத்திலுள்ள நலம்தான் காரணமாகின்றது. திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்,

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்'' (குறள்)

ஆகையினால் இத்தகைய தீய செயலை சுயநலத்தின் காரணமாக மனிதன் செய்கின்றான். பின் தீயவை செய்தமையால் துன்பமுறுகின்றான்.

''எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்'' (குறள்)

எவ்வளவு கொடிய பகை உடையவரும் ஒருவகையால் தப்பி வாழ முடியும். ஆனால் தீயவை செய்தலால் வரும் தீவினையாகிய பகை நீங்காமல் பின் சென்று வருத்தும். இதை அறியாதவர்களே தீவினையை செய்கின்றனர்.

இப்பொழுது ஒரு மனிதன் தீய வினைகளை செய்வதற்கு உறுதுணையாக இருப்பது சுயநலம், அல்லது தனக்கு பிரியமானவர்களுடைய நலம் தான் காரணமாகின்றது. இத்தகைய காரணத்தினால் நல்ல மனமானது கெட்டுவிடுகின்றது. ஆனால் எல்லோரையுமே தனக்கு பிரியமானவர்களாக யார் எண்ணுகின்றார்களோ அவர்களுடைய மனம் நல்லதாக ஆகிவிடும்.

நமது குருநாதர் சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்கள் உலகத்துமக்களனைவரையும் தனக்கு வேண்டியவர்களாக பாவித்த காரணத்தினால் எல்லோரிடத்திலும் ஒன்று போல அன்பு காட்டினார். அதனால் எல்லோருக்கும் நல்லவராக விளங்கினார்கள். ஆகையினால் நம்முடைய மனதை நல்லதாகவும், கெட்டதாகவும் ஆக்குவது நம்முடைய பாவனையினால்தான் என்பதை பூனையின் பல்லினால் தெரிந்து கொள்வோமாக.

ஓம்சாந்தி.

# ஆச்சிரம வாழ்வு ஆனந்த வாழ்வு

(புலவர். சி. விசாலாட்சி)

மனத்தை யுடையவன் மனிதன். மனம் பொறி வழியிற் சென்று அலேவது இயல்பு. அப்படிப்பட்ட மனதைச் செந்நெறியிற் செலுத்தி, மனித வர்க்கம் வாழப் பண்டைய இருஷிகள் வாழ்ந்து, அநுஷ்டித்து, அடைந்து காட்டியிருக்கின்ருர்கள். அவர்கள் எங்கு இருந்தாலும் அது ஆச்சிரமமாகவே இருந்தது. அவர்கள் சிஷ்ய வர்க்கத்தோடு அன்றும் இருந்தார்கள். இன்றுமிருக்கிருர்கள். இன்னும் இருப்பார்கள். இது ஓர் இறை நியதி. இந் நியதிப்படி ஆச்சிரம வாழ்வு வாழ்ந்தால், ஆனந்தமடையலாம் என நீண்ட காலமாகத் தோற்றிக் கொண்டே இருந்தது. உருத்திர புரத்தில் மகாதேவ ஆச்சிரமம் தலம், மூர்த்தி, தீர்த்தம், குரு, லிங்க, சங்கமம் ஆதியன பொருந்திய வண்ணமாக இருக்கின்ற தெனக் கேள்விப் பட்டேன். ஆனல் அவற்றை நேரிற் சென்று கண்டதே இல்லே. திருவருள் கைகூடத் திடீரென அங்கு செல்ல நேரிட்டது. மனம் போல வாழ்வு என்பதற் கமைய அன்றுதான் மகாதேவா ஆச்சிரமம் பார்க்க வேண்டுமென்பதும் கைகூடிற்று. அங்கு நாம் சென்ற பொழுது மணி ஐந்தடித்துக் கொண்டே இருந்தது. வெளியே இருந்த மனேநிலே யெல்லாம் ஆச்சிரமத்துட் புகுந்ததும் வேறு விதமாக மாறி விட்டது. உள்ளே சென்றதும் அங்கு ஓர் விதத் தெய்வீகக் காந்தம் நம்மை யாட்கொண்டு விட்டது. பண்டைக்கால ரிஷிபத்தினிகள், முனிவர்கள், இருடிகள் வாழும் தூய இடமாக அவ்வாச்சிரமம் காட்சி அளித்தது.

சிவமும் சக்தியும் ஆகிய இரு உருவங்கள் காட்சி அளித்தனர். அவர்கள் திருவாய் மலர்ந்த ஒவ்வொரு வசனமும் எம்மைப் பேரின்ப நிலேக்கு அழைத்துச் செல்வது போன்று காணப்பட்டது. அவர்கள் காட்டிய அன்பு, கூறிய இன்ப மொழிகள், ஆற்றிய அருட்பணிகள், பார்த்த அருட்பார்வை, யாவும் எம்மை ஈர்த்து ஈர்த்து ஆட்கொண்டே, இதுதான் வாழ்க்கை, இதுதான் முறை, இதுதான் முடிந்த முடிவு என்ற சீரிய ஒழுக்கங்களேக் கண்டோம். ''குருவில்லா வித்தை பாழ்'' என்ற உண்மையை அன்றுதான் உணரவும் முடிந்தது. சிறந்த ஞானத் தாயின் ஞான

மொழிகள், பரிவுயாவும் எமக்குள்ள பெரியகுறையை நீக்கும் மருந்தாகவே இருந்தது. அதன் பயனாக அவ்வாச்சிரமத்திற் றங்கிப் பெருவாழ்வு பெறும் நோக்கு ஒன்றுடனே அவ்விடம் நின்று விட்டேன்.

அங்கு காணும் ஒவ்வொரு செயலும் காட்சியும் மற்றவற்றை நோக்குமிடத்து மிக நூதனமாகப் புதுமை அளித்துக் கொண்டே இருந்தது. நேரசூசி இல்லை. கட்டுப்பாடு இல்லை. ஏவல் இல்லை. ஆனால் கருமயோகம், பக்தியோகம், இராசயோகம் இயல்பாக நடந்து கொண்டே இருக்கும். இயற்கை நியதி அமைந்த இவ்வாச்சிரம வாசிகள் குருவின் கீழ் தம் வாழ்க்கையைச் சீரிய முறையிற் செலுத்தி வருகின்றார்கள். ஆச்சிரம வாசிகளுக்கு வழிகாட்டியாய் ஆச்சிரமத்தின் தீர்க்கதரிசிகளாய் ஞானமுடை குருவும் ஞானத்தாயும் எம்மை யெல்லாம் அன்புடன் பேணி வருகின்றனர். காலை நாலு மணிக்கே ஆச்சிரமத்தோர், எழுந்து நீராடி தியானத்தில்இருப்பர். இந்நேரம் சிறந்த அமைதியாகவே காணப்படும். பின்பு திருமுறைகள் ஓதுவார்கள். ஞானநூல் சாஸ்திர நூல் குரு விளக்கத்துடன் படிக்கப்படுகின்றன. யோகாசனங்களும் நடைபெறுகின்றன. எல்லாம் யோகிகள் யோகினிகள் ஆனபடியால், காலை உணவு முக்கியமாகக் கருதப்படுவதில்லை.

ஆனந்தமாக காலைப் பொழுதைக் கழிக்கும் அடியார்கள் இறைபணியில் எட்டுமணியின் பின் ஈடுபடுவார்கள். எல்லா வேலைகளையும் சீர்பட முடித்தபின்பும் தத்தம் எண்ணப்படி ஞானநூல், வேதநூல் ஆதியன ஆராய்வார்கள். இங்கே நடக்கும்ஒவ்வொரு தொழிலும் அழகும் தூய்மையும் சிக்கனமும்கூடியதாகக்காணலாம். ஆண்களன்றிப்பெண்களும்செவ்வியசீரியமுறையில் ஆண்டவன்பணியினைஆற்றிவருகின்றனர். பத்துமணி அடித்ததும் பெண்கள் அன்னசாலையுட் செல்வர். பார்ப்போர் உள்ளத்தைத் தொடும் வண்ணம் ஒழுங்குபட சமைக்கத் தொடங்குவர். சமைக்கும் இடம் யாகசாலை. எரிக்கப்படும் விறகு நெய் முதலிய பதார்த்தங்கள். சமைக்கப்பட்ட உணவு அவி. அந்த அவியை உண்பவர்கள் தேவர்களாவர். எச்சிந்தனையும் இன்றி ஆண்டவனுக்கு ஆற்றும் பணியென, உள்ளத்திற் சிந்தித்துஅன்னபூரணியின் வழிபாட்டுடன் அட்டிற்றொழில் செய்வதனால், எத்தனை அன்பர்கள் வந்தாலும், அத்தனை அன்பர்களையும் தவத்திரு அன்னை

அவர்கள் அன்புடன் திருவமுது படைப்பார்கள். அன்னையவர் தன்னை, அன்பர்களுக்கு வெளிக்காட்டாது பெரியோர் சிறியோர் என்ற பாகுபாடின்றி யாவரையும் ஒத்ததன்மையராக்கி அருட்பார்வையுடன் அன்புபசாரம் செய்வார்கள். அவர்களின் இனிதான மொழியால் என்றும் இன்பமழை சொரிந்த வண்ணமாகவே காணப்படுகிறது.

பன்னிரண்டு மணிக்கு குருவால் மூர்த்திக்கு தீபாராதனை அலங்காரம் நடத்தப்படுகின்றது. இறைவன் வழிபாட்டில் தம்மை மறந்த அடியார்கள் குருவை விழுந்து வணங்கிய பின்பே சிவசின்னங்களைப் பெற்றுத் தரித்துக் கொள்ளுகின்றனர். பன்னிரண்டரை மணிக்கு உணவு உண்கின்றனர். தெய்வ வழிபாட்டுடன் செலுத்தப்படும் உணவு தெய்வச் செயலையும் தெய்வ நினைவையும் பெருக்கிக் கொண்டே இருக்கின்றது. இதன்பின் கதாப்பிரசங்கம், பண்ணுடன் கூடிய பதிகங்கள், உரையாடல், தர்க்கம், கருத்தரங்கம், மாலை நாலுமணிவரை நடக்கும். பெரிய அறிவாளிகளானுலும் ஞானிகளானுலும் குழந்தையைப் போன்ற இனிய மழலை மொழிகளைப்பொழிந்துமகிழ்வர். குழந்தைஇன்பத்தைஅனுபவிப்பர். அறிவாளிகள் போன்று கருத்தரங்கம் வாதம் நடாத்துவர். மாலை ஆறு மணியானதும் மாலைக்கடன் முடித்து எல்லோரும் மோன நிலையில் இருப்பார்கள். மாலை ஏழு மணிக்குப் பூசனை பிரார்த்தனை நடைபெறுகின்றது. ஏழரை மணியின் பின் மோக்ஷசாதன நூல் குரு வழிபாட்டுடனும் குருவின் விளக்கத்துடனும் படிப்பார்கள். சந்தேகம் உண்டாகும் இடங்களில் குருவானவர் அவ்விடங்களைத் தெளிவு படுத்தி விடுவார்கள். பத்து மணிக்கு முன் உணவருந்திய பின்னர், தியானத்துடன் கூடிய ஆனந்தத் துயிலாழ்வர்.

எனவே மகாதேவா ஆச்சிரம வாழ்வில் உணவளிக்க அன்னசாலையும் பாடம் படிக்கப் பாடசாலையும் ஆத்மீக ஞானம் பெற அரியதோர் ஞானசாலையும் இருப்பதைக் காணலாம். தாகம் உள்ளவன் நீரை ஆவலுடன் குடிப்பது போன்று அரிய உண்மைப் பொருளையும் அதன் பயனையும் அடைவதற்காகச் சாலச் சிறந்த குருகுலமும் அமைந்திருக்கின்றது. வேண்டும் பொருள்களை வேண்டிய போதெல்லாம் அளித்து அன்பர்களைச் சச்சிதானந்தக் கடலுட் செலுத்துகின்றது. ஆச்சிரம வாழ்வினுல் அடையும்

ஆனந்தம் வாழைக்கனியாய் நறும்பாலின் சுவையாய், கற்கண்டாய்த் தெவிட்டாத் தேனுய்ச் சுவை தருகின்றது.

பிறவிக் கடலைத் தாண்டும் தெப்பமாகவும் ஆண்டவனுடன் மனிதனைப் பிணைக்கும் சங்கிலியாகவும் எட்டாத இறைவனின் பதத்தை அடையஏற்றிச்செல்லும்ஏணியாகவும் இவ்வாச்சிரம வாழ்வு இன்றைய மக்களுக்குப் பெரிதும் உதவுகின்றது. ஆச்சிரம வாழ்விஞல் அடையும் பெரும் பயன் இதுதான் இவ்வளவுதான் என்று சொல்லாற் கூறிவிட முடியாது. அப் பயனை ஆச்சிரம வாசிகளே அனுபவித்து உணர, அறிய முடியும். ஆச்சிரம வாழ்வு என்றும் நிலையுள்ளது ஆனந்தமானது என்பதை உணர யாவரும் முயல்வாராக.

ஓம் தத் சத் சாந்தி.

---

# அத்தனின் அருள்

ஆசிரியர், "இளங்கண்ணன்" தலைமை ஆசிரியர்,
பூங்கா உயர்தர ஆரம்ப பள்ளி, உடுமலை.

— தொடர்ச்சி —

"கல்லாலின் புடை அமர்ந்து நான்மறை
ஆறு அங்கம் முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கு இறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாம்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்லுவாம்"

திருவிளையாடற் புராணம்.

வாள்வலியும் மனவலிமையும் உடைய வல்லோருக்கும் இறைவன் அருளியிருக்கின்ருன். தீமையே செய்ய எண்ணி தன் வன்மையினுல் இறைவனிடத்துவரம்வாங்கக் கடுந்தவம்

புரிந்தோருக்கும்அவர்கள்கேட்ட வரத்தைக் கொடுத்து அவர் கள்வினையேஅவர்களுக்குமுடிவாக அமையுமாறுவிட்டிருக்கின் ருன். பாரத வெஞ்சமரில் கௌரவர்களை வெல்வதற்கு பாசு பதம் வேண்டி கயிலையில் கடுந்தவம் புரிந்து பரமனைக்காண முயன்ற அர்ச்சுனனுக்கு அவன் கேட்ட வரத்தை அவனோடு வேடனாக வந்து மற்போர் செய்து அவன் வீரத்தை உலகுக் குக் காட்டி அவன் தகுதியை ஒட்டி அதனை அளிக்கின்ருர். இறைவனின் அருளுடைமையை அடைய உலகத்தாரின் பொருள்களை எல்லாம் தன் வாள்வலியால் கவர்ந்து திருப் பணிகள் செய்து வந்த திருமங்கை, புதுத்தம்பதிகளாக வந்த இறைவன் கொண்டு வந்த செல்வத் திரளைத் தூக்க முடியா மல் சலித்து வாள் வலியால் அதன் மாயம் அறிய முயன்று அஷ்டாச்சரத்தை அடைந்தார். இறைவனிடத்திற் கொள்ளை யடிக்க முயன்று தன்னை அவன் கொள்ளைகொள்ளச் செய்யும் நலந்தரும் நாமமாகிய நாராயணமந்திரத்தை நா நவின்றேத் தினுர் திருமங்கையாழ்வார். ஆதிக்கம், தான் நம்புகின்ற பண்பாடுகள் செல்வம் ஆகியவையே வாழ்க்கையின் சாரமாக கருதுகின்ற அசுரசம்பத்தின் மீது ஆசை வைத்து இறைவனி டத்திலே கடுந்தவம் புரிந்த அசுரர்கள் யாவரும் தாங்கள் நினைத்த வரத்தை அடைந்தனர். இறைவன் அவர்கள் கேட் கின்றவரத்தை, செய்திருக்கின்ற தவத்தையொட்டி அளித்து அவ்வரத்தை அவர்கள் பயன்படுத்தும் போது அவர்களிடை யே உள்ள குறைபாட்டின் காரணமாக அவர்களுக்கு முடிவை யும் ஏற்படுத்தியுள்ளார். ஒரு அரசன் ஒரு சில தகுதிகளை யொட்டி பெரும் பதவிகளை நல்லோருக்கே அளிக்கின்ருன். அப்பதவிகளின் தகுதிகளோடு சில தன்னலக்காரர்கள் அவனிடத்திலே அப்பதவிகளுக்கு போராடும் பொழுது தகுதி களை மதிப்பதற்காக அப்பதவிகளை அளிக்கவேண்டி வருகிறது. பதவிக்கு வந்தபின் அவனுடைய குறைபாடுகளை அரசன் கண் காணித்து வருகிருன். அக்குறைபாடுகளே அவர்களுக்கு வீழ்ச்சிக்கு வழியாக அமைகிறது. இதுபோன்று இறைவன் அசுரர்களுக்குவரமளித்திருக்கின்ருன். யாருக்கும்கிடைக்காத வீட்டுப் பேற்றினை அளிக்க வல்ல இறைவன் நரகாசூரன் முன்பு, அவன் கடுந்தவத்தினுல் தோன்றிய பொழுது அவன் தானே ஆளவேண்டும் என்ற ஆதிக்க வெறியினுலே தான் யார் தலையில் கைவைத்தாலும் அவர்கள் சாம்பலாக வேண் டும் என்ற வரத்தைக் கோருகிருன். அவன் செய்த தவத் தை மதித்து இவ்வரத்தை அளித்தார். அவன் வரத்திலுள்ள குறைபாட்டினைக் கொண்டு அவன் அழிந்தான். அவன்

தலையை விதிவிலக்காக வைத்து வரம் கேட்கவில்லை. ஆகவே மாயன், அவன் தலையில் அவனே கைவைத்துக்கொள்ளுமாறு செய்த பொழுது அவன் அழிந்தான்,

வல்லாருக்கு வரம் வழங்கிய இறைவன் மாட்டாருக்கும் அருளுகின்றான். அரிமர்த்தனபாண்டியன் ஆற்றில் வெள்ளம் வந்தபொழுது கரை யெடுக்க வீட்டுக்கோர் ஆள் அனுப்பு மாறு கூறினான். அப்பொழுது பிட்டு விற்று வயிறு வளர்த்து வந்த வறியவளாகிய வயது முதிர்ந்த வந்தி, யாரை அனுப்பி கரை அடைப்பது என்று எண்ணி அரசரின் ஆணைக்கு அஞ்சி அழுகின்றாள். இறைவனிடத்திலே முறையிடுகின்றாள்.

**''காவர் செங்கோலார் சீற்றம்**
**கடுகுமுன் கூலியாளாய்**
**ஏவற் செய்வாரை காணேன்**
**ஏழையேன் என் செய்வேன்''**

என்று சிவனாரிடத்தில் புலம்பினாள். அவள் அழு குர லுக்கு மனமிரங்கிய இறைவன் கூலியாளாக வந்து அவள் கொடுத்த பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனின் பிரம்படி பட்டு பின்னர் தம் இறைமையை உணர்த்தினார். அதனை உணர்ந்த பின்பு வந்தியும் வீடு உற்றாள். இறைவன் உயி ரினங்கள் தன் வாழ்வில் நேரும் துன்பங்களினின்று விடுபட முடியாமல் செயலொழிந்து அவனைக் கூவி அழைக்கும்போது நோய்க்கு மருந்தாக அமைந்து அருளுவதோடு, விழுப்ப முடையோருக்கும் வன்மை உடையோருக்கும் விருப்பத் தைத் தீர்க்கும் வாலறிவனாய் விளங்குவதை அறிந்த வள் ளலார் அவன் அருளை புகழ்வதாக அமைகின்ற பாடலில்,

**''வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே''**

என்று பாடினார்.

(தொடரும்)

'ATHMAJOTHI' Registered at the G.P.O. as a Newspaper. M.L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

17 ஆவது ஆண்டு 8 வது சோதி இன்று உங்கள் கையில் கிடைக்கின்றது. சந்தா நேயர்களின் உதவியினாலேயே சோதி பதினாறு ஆண்டுகளைக் கடந்துள்ளது. சோதிக் குழந்தை உங்கள் வீட்டைத் தேடிவரும்போது என்ன பரிசு அளிக்கப் போகின்றீர்கள். உங்கள் சந்தாவை உடனே அனுப்பி வைத்தல்தான் நீங்கள் கொடுக்கும் பரிசாகும். என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக.

இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ்,
அரிசிப்பாளையம், சேலம்—9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு இவ்விடமும் அறியத் தருவீர்களாக.

**ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி. (சிலோன்)**

---

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 1. | ஆத்மஜோதி மலர் (1963) | 2.00 |
| 2. | சைவஇலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| 3. | ஆத்மநாதம் | 3.00 |
| 4. | தீங்கனிச் சோலை | 2.50 |
| 5. | பாட்டாளிபாட்டு | 1.50 |
| 6. | திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா மலர் | 1.25 |
| 7. | கூட்டு வழிபாடு | .30 |
| 8. | நவராத்திரிப் பாடல் | .30 |
| 9. | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 10. | கதிர்காமப் பதிகம் | .25 |
| 11. | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| | கந்தரனுபூதி | .25 |
| | அறிவுரைக் கதைகள் | .65 |
| 14. | நித்திய கருமவிதி | .25 |
| 15. | கதிரைமணிமாலை | .50 |

தபாற் செலவு தனி

---

அச்சிடுவோர்:- ஆத்மஜோதி அச்சகத்தினர்
அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்
வெளியிட்டதேதி:- 15-6-65.